
# கொங்கு

ஆசிரியர்: புலவர் செ.இராசு

மார்கழி 2003]                [டிசம்பர் 1972



25 அறிவியல், வரலாற்றுத் திங்களிதழ்

# கொங்கு

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!*
*காமம் செப்பாது, கண்டது மொழிமோ.*

தேனடை 2 | 15—12—72 | தேனீ 12

## வணக்கம்

மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்
நாமநீர்வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான் சுரத்தலான்

என்று இளங்கோவடிகள் பாடியது, நிச்சயமாக வற்கட நிலைமையிலாகத்தான் இருக்க வேண்டும். புயல் வாய்த்து வளம் பெருக வாழ்த்தும் புலவர்களெல்லாம், மழை பெய்த போதுற்ற இன்னலைப் பொருட்படுத்தவில்லை போலும். பெருமழையால், அவ்வப்போது சிறு தொல்லைகளும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்ட போதிலும், பின்னர் நாடு செழிப்பதால் எக்காலத்தும் மாமழை போற்றுவோம்.

கொங்கு, இவ்விதழுடன் தன் இரண்டாவதாண்டு நிறைவு பெறுகிறது. வாசகர்களின் பெருத்த ஆதரவே எங்கள் முதலீடு. சந்தாத் தொகை மிகச் சிறியதாக இருப்பதால் (ரூ. 3/-), அதை அனுப்ப ஏற்படும் நேரச் செலவை எண்ணி, அனுப்பாமலிருக்கும் நேயர்கள் நான்காண்டுச் சந்தாவாக பத்து ரூபாய் அனுப்பிவிடக் கோருகிறோம்.

அடுத்த இதழ் பொங்கல் சிறப்பிதழாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல தாங்கி, கூடுதல் பக்கங்களுடன் வெளிவர இருக்கின்றது. அடுத்த இதழிலிருந்து இதழின் அமைப்பை **(Format)** சற்றே மாற்றி கூடுதல் பக்கங்களுடன் வெளியிட எண்ணியுள்ளோம். உங்கள் வாழ்த்துக்களை எதிர் நோக்கி, பீடுற முன்னேறுவோம். நன்றி.

—ஆசிரியர்

---

அட்டை : *மேற்கு ஜெர்மனியில் சிறுர்களின் சைக்கிள் பந்தயம். இளமைத் திறத்தைத் தூண்டும் நாடல்லவா அது !*

# கண்ணகி சிலையும் - கல்வெட்டுகளும்

புலவர் செ. இராசு

மதுரை நகரில் சிம்மக்கல்லின் தெற்கே வடக்கு நோக்கியுள்ள செல்லத்தம்மன் கோயிலில் ஒரு கண்ணகி சிலை உள்ளதாக 'கண்ணகிக் கோட்டம்' கட்டுரையாசிரியர் கரந்தை திரு. கோவிந்தராசனுர் குறித்துள்ளார்.* அதைப் பற்றி ஆய்ந்து மேலும் சில விளக்கங்களை அளிப்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும். அவர் குறிக்காத கண்ணகியின் பழைய சிலைகள், மாதிரி சிலை, கல்வெட்டுக்கள் இங்கு குறிக்கப்படுகின்றன.

## முன்மண்டபத்தில் கண்ணகி சிலை :

திரு. கோவிந்தராசனுர் அவர்கள் சிலை பற்றிக் குறிப்பிடும் பகுதியைக் காண்போம். "கருவறைக்கு முன்னருள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கியதாகப் பாண்டிய மன்னனொருவனால் அமைக்கப்பட்ட கண்ணகி சிலை ஒன்று உள்ளது. இச் சிலையே முன்னர் கோயிலுக்குரிய மூல தெய்வமாக செல்லத்தம்மன் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை முதியவர்கள் கூறக்கேட்டறிந்தேன் ... பிற்காலப் பாண்டியர் வளர்த்த சிற்பக் கலை நுட்பங்களுடன் விளங்கும் இக்கண்ணகி சிலை மானிட வடிவில் இரண்டு கைகளோடு இருக்கிறது. கருணை பொழியும் முகம், வாரி இடப்புறம் கொண்டையிட்ட கூந்தல், தோளளவு தொங்கும் அணிகள் இல்லாத தொள்ளைக் காது, மங்கல அணி யுடன் (தாலி) விளங்கும் மார்பு. வலது கை ஒரு மலரை ஏந்தி நிற்க, இடது கையில் இலாவகமாகச் சிலம்பொன்று உள்ளது. வலது காலைக் குத்திட்டு, இடது காலை மடக்கி மணையில் அமைத்த மர்ந்த தோற்றம்".

## கண்ணகியின் பழைய சிலைகள் ;

ஆசிரியர் குறித்துள்ளதுபோல் மண்டபத்தில் உள்ள இக் கண்ணகி சிலை பாண்டிய மன்னனால் அமைக்கப்பட்டது என் பதற்குச் சான்றேதும் இல்லை. இக்கோயிலின் கிழக்குச் சுற்றுச் சுவரில் மேற்குப் பார்த்த நிலையில் இரு சிலைகள் பாதிக்கப் பட்டுள்ளன. இச்சிலைகள் கோயிலின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள சிலையைக் காட்டிலும் சற்று அளவில் சிறியன. திரு கோவிந்த

---

* தமிழரசு 72, ஜூலை, ஆகஸ்டு.

† தமிழரசு 72, ஜூலை 16, பக்கம் 44.

ராசனுர் மேலே கூறும் வருணனைகள் அனைத்தும் இவற்றுக்கும் பொருந்தும்.

இச்சிலைகளும் அமர்ந்த நிலையில் உள்ளன. இடக்கையில் சிலம்பும் உள்ளது. ஆனால் வலக்கையில் ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. உள்ளே உள்ள சிலையின் வலக்கையில் மலர் கொடுக்கப்பட்டுள்ளது. வெளியே உள்ள சிலைகள் இரண்டும் வலக்கை இடது மார்பின்மீது பொருந்தி உள்ளது. இந்த வேறுபாடு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.* உள்ளே இருப்பதைப் புதிய கண்ணகி சிலையாகக் கொண்டால் வெளியே இருப்பன வற்றைப் பழைய கண்ணகி சிலைகள் எனக் கொள்ளவேண்டும். இவை பாதுகாக்கப்பட வேண்டிய சிலைகளாகும். இச்சிலைகள் வழிபாட்டில் இல்லை.

### இடைச்சி அம்மன் :

உள்ளே உள்ள கண்ணகியின் சிலை அருகே சிறு வடிவமாக நின்ற நிலையில் ஒரு சிலை உளளது. "இடைச்சி அம்மன்" என்று அதனைக் கூறுகின்றனர். அச்சிலை இடைக்குல மடந்தை மாதரியின் சிலையாக இருக்க வேண்டும். புறஞ்சேரியில் கவுந்தியடிகளால் அடைக்கலமாகக் கண்ணகி மாதரியிடம் ஒப்படைக்கப் பட்டமையால் பிற்கால இடையர்கள் இடைச்சி அம்மனை (மாதரியை) அங்கு எழுந்தருளுவித்திருக்கின்றனர் போலும்! இனி அங்குள்ள கல்வெட்டுகளைக் காண்போம்.

### இரு மெய்க்கீர்த்திப் பகுதிகள் : (மேற்குச் சுவர்)

(அ)......மாது நீதியிற் புணர......
......மடந்தை வாக்கினில்......
......நெறிவளர மனுநெறிதிகழ......
......வில்லவர் செம்பியர்......
......வீற்றிருந் தருளிஸ்ரீகொ......
......யாண்டு பதின்மூன்......
......மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ்.

கல்வெட்டுடன் கூடிய இது சடையவர்மன் குலசேகர தேவனின் (1190-1218) 'பூவின் கிழத்தி' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திப் பகுதி. வெட்டப்பட்ட ஆண்டு கி.பி, 1203 ஆகலாம்.†

### (ஆ) கிழக்குச் சுவர்

......வப்புலியூர்த் திருவெல்லையுட்புக்கு......
......களித்துக் கோலமலர் மேலயனுங்கு......
......பும் பூங்கமல வாவிசூழ் பொன்னித்......

---

* கொங்கையைத் திருகி எடுத்து மதுரையை எரித்த கருத்தைப் புலப்படுத்துகிறது,

† பாண்டியர் வரலாறு, பக்கம் 107.

......திருந்து சோலை பழனச்சே......
......புறத்துப் போனவளவ னுரிமையே

இம்மெய்க்கீர்த்திப் பகுதி சோணாடு கொண்டருளிய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (1216-1238) "பூமருவிய" என்று தொடங்கும் மெய்கீர்த்தியில் உள்ளது. *

**சிதைந்த கல்வெட்டுக்கள் : (மேற்குச் சுவர்)**

(1) ஸ்வஸ்தஸ்ரீ திரிபுவன......
தூற்றுக் கூற்றத்......
......லூருடையான் சீராமன் உய்......
......க்கும் ஸ்ரீவைஷ்ணவார்க்கும் தெ......
......கனூர்க் கூற்றத்துச் † சோழகுல......
......ரிகுலசேகர பேரேரியேன்.......

(2) ......ஸ்ரீயாண்டுப......
......வதானஇறை......
......மூனல்லூர்க்கப்......
......க்கீழ்த்தென்......
......ாழ்வார்க்......
......க்கீழ்......
......லகிழ செம்பியன்......
......இவை காலிங்க......
......யன்ஃ எழுத்து......
......ாண்டிய தரை......

**(3) தெற்குச் சுவர்**

......ன் வீரநாராயுணக் குளக்கீழ் தென்னவன் கப்பலூ......
......ஞன பொத்தப்பிச் சோழர் உகந்தருளுவித்தநி......
......வ்வாழ்வார்க்குத் திருப்படி மாற்றுள்ளிட்டுவெ......
......க்கலமும் உட்படத் தேவதான இறையிலி......
......கழனேரி நான்கெல்லை.......

(4) ......இவை புரவுவரித்திணைக்
களநாயகம் மிழலைக்
கூற்றத்துப் பொன்பற்றி
உடையான் திருப்பூவ
ணமுடையான் திரு.........

---

* பாண்டியர் வரலாறு, பக்கம் 214.

† பாகனூர்க் கூற்றம்: வேள்விக்குடிச் செப்பேடு வரி ... பாண்டியர் செப்பேடு பத்து, பக்கம் 22.

ஃ காலிங்கராயன் என்பது அரசர்கள் அளிக்கும் சிறப்புப் பெயர். பல தலைவர் இப்பெயர் பெற்றனர். பாண்டியர் சிம்மாசனமும் இப்பெயர் பெற்றது.

வரங்க தேவனை.*

.........................

(5) கிழக்குச் சுவர்

......வத்தி கோனேரின்மை கொண்டான் உடையார் திருவால
வாயுடைய நாயனர் கோயில் †
......மயச் சோழ கோனர் எழுந்தருளுவித்த உடையார்
அஞ்சாதீஸ்வரமுடை
யார்க்கும் உடை ... ப்புக்கு எல்லையாவது
கீழெல்லை ஆச்சிராமத்துக்கு
மேற்கும் தென்னெல்லை ... க்காலுக்குத் தெற்கும் ஆக இந்
நான் கெல்லைக்குள்ளகப்பட்ட நத்தமும் நீர்நிலை ... ஆவது தை
மாதம் முதல் இந்நாயனருக்குத் திருவிருப்புக்கும்
திருமடைவிளா
...... உபாதிகளுக்கும் கழித்து முதலடங்க தேவதான
இறையிலியாக...

இக்கல்வெட்டுக்கள் முழுமையாக இல்லாவிடினும் கிடைக்கும் அளவில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. இவை இன்னும் படி எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. பிற்காலத் திருப்பணிகளின் காரணமாகச் சிதைவு ஏற்பட்டுள்ளது. பிற கோயில் கற்களும் வந்துவிட்டன போலும்! ஸ்ரீவைஷ்ணவர், திருவால வாயுடைய நாயனர் ஆலயத்து அஞ்சாதீஸ்வரமுடையார் பெயரும் இங்கு அப்படித்தான் வந்திருக்க வேண்டும்.

**கல்வெட்டுக்களிலிருந்து அறிவன :**

'பாண்டி மண்டலத்து முத்தூற்றுக்கூற்றத்துக்
கப்பலூரான உலகளந்த சோழநல்லூர்
கப்பலூருடையான் கருமாணிக்கன் யாதவனை
காலிங்க ராயன்' ‡

மரபினர் முதல் மூன்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றனர். இம்மரபினர் கல்வெட்டு பாண்டிய நாடு, நடு நாடு, தொண்டைநாடு எங்கணும் காணப்படுகிறது,** இத்தலைவன்

---

* 'ராஜ ராஜ வளநாட்டு மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றி யுடையான்' —பெருந்தொகை 623.

'மிழலைக் கூற்றம் பாண்டிய நாட்டில் உள்ளது' —பாண்டியர் வரலாறு 24.

பொன்பற்றி - தஞ்சை மாவட்டம் அறந்தாங்கி வட்டம்.

பொன்பேத்தி - சாசனத் தமிழ்க்கவி சரிதம்.

† மீனட்சி சுந்தரேஸ்வரர் கோயில்

‡ தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்—1-474. தென்னிந்தியச் சாசனங்கள்—4-374.

** கல்வெட்டுத் துறை ஆண்டறிக்கை 92-1936.

14ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவன் என்பார் மு. இராகவையங்கார்.*

இக்கப்பலூர்த் தலைவன் கருமாணிக்கனே கப்பற்கோவையில் பாட்டுடைத் தலைவனாகப் போற்றப்படுபவன். கப்பற் கோவையிலும் இவன் இடையர் மரபினன் என்று குறிக்கப்படுகின்றான். கல்வெட்டுக்களிலும் 'யாதவனான' என்ற தொடர் வருகிறது.†

## கப்பலூர் யாதவர் பொத்தப்பிச் சோழர் மரபினரா ?

கப்பற் கோவையில் கருமாணிக்கன் 'தொண்டையர்கோன்' என்று பாராட்டப் பெறுகின்றான். எனவே கப்பலூர் யாதவ மரபினருக்கும் தொண்டை நாட்டுக்கும் தொடர்பு இருப்பது புலனாகிறது. ‡ தொண்டை நாட்டின் வட பகுதியை தெலுங்கச் சோழர் (சோடர்) என்ற மரபினர் ஆண்டு வந்தனர். கி. பி. 9ஆம் நூற்றாண்டிலேயே அவர்களில் ஒருவன் 'பொத்தப்பிச் சோழன்' எனக் குறிக்கப்படுகின்றான். இப்பொத்தப்பிச் சோழன் மகள் 'அக்களநிம்மடி' என்பவளை பாண்டியன் 'சீமாறன் சீவல்லபன்' மணம் செய்து கொண்டிருந்தான்.**

காஞ்சியில் சிறப்பான பல கல்வெட்டுகளை 13, 14ஆம் நூற்றாண்டுகளில் பொறித்த ஸ்ரீகண்ட கோபாலர் பொத்தப்பிச் சோழர் மரபில் இறுதியானவர்கள். அவர்களும் இடையர் மரபினர் என்று ஒரு கல்வெட்டால் ஊகிக்க வேண்டியுள்ளது.†† கோபாலர் என்று பெயரை வைத்துக் கொண்டமையும் அவர்கள் இடையர் என்பதைக் காட்டுகிறது.*** அவர்கள் முன்பு சித்தூர் அருகேயுள்ள புடோலியிலிருந்தும், திருக்காளத்தியிலிருந்தும், சிலகாலம் காஞ்சியிலிருந்தும் அரசாண்டனர்.****

பெரும்பாலும் தொண்டை நாட்டுப் பகுதியை ஆண்ட பொத்தப்பிச் சோழர் மரபினராகவே கம்பலூர் யாதவ மரபினர் இருக்கவேண்டும். இதற்கு ஆதரவாக 'தென்னவன் கப்பலூ

---

* சாசனத் தமிழ்க்கவி சரிதம்-113

† கப்பல் கோவை-379.

‡ கப்பல் கோவை 11.

** பாண்டியர் வரலாறு 68..

†† 'காக்கு நாயக இடையன்' - தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் 1 - 442.

*** இராசகண்ட கோபாலன், அல்லுந் திருக்காளத்தி தேவ கண்ட கோபாலன், விஜயகண்ட கோபாலன். சிரீகண்ட கோபாலன்.

**** தென் னிந்தியக் கோயில் சாசனங்கள் 1 - 442. சாசனச் செய்யுள் மஞ்சரி 129. பொத்தப்பிச் சோழன் சியகங்கனின் மாமன் என்று கல்வெட்டில் (தெ. இ. சா. 4 - 317) குறிக்கப் பெறுகின்றான். இவர் வரலாறு ஆய்வுக்குரியது.

(ருடையான் யாதவ)னை பொத்தப்பிச் சோழர் உகந்தருளுவித்த' என்ற தொடர் விளங்குகிறது. இவர்கள் இறுதிக் காலம் வரை பாண்டியருக்கு உறவாகவும் படைத் தலைவராகவும் அமைச்சராக வும் இருந்திருக்கின்றனர்.*

ஐந்தாம் கல்வெட்டில் ... '(தன்)மயச் சோழ கோனார்' என்ற பெயர் வருவதும் மேற்கண்ட கருத்துக்கு ஆதரவாக உள்ளது.

## இடைக்குல மடந்தையின் அடைக்கலம்!

பாண்டியர் மாநகர் மதுரையில் இடையர் சேரியில் கண்ணகி அடைக்கலமாக இருந்த காரணத்தால் † (யாதவர், கோன், கோனார் என்ற பல சிறப்புப் பெயர்களையுடைய) இடையர்கள் கண்ணகி கோயிலுக்குத் திருப்பணி செய்திருக்கின்றனர் போலும். இவர்களிலே எவரேனும் ஒருவர் தம் குல மாதரான மாதிரிக்கும் சிலை எடுத்திருக்கலாம். இன்றும் கோயிலைச் சூழ்ந்து யாதவர் வசிக்கின்றனர்.

## முடிவுரை :

மேற்கண்ட காரணங்களால் செல்லத்தம்மன் கோயிலில் உள்ளவை கண்ணகி சிலைகளே என்றும் இடையர் திருப்பணி புரிந்தனர் என்பதும் தெரிய வருகிறது. இருப்பினும் இக் கோயிலும், சிலைகளும், கல்வெட்டுக்களும் இன்னும் ஆராய்தற் குரியன.

---

* சாசனத் தமிழ்க்கவி சரிதம் 112,

† சிலப்பதிகாரம். அடைக்கலக்காதை 130.

---

கட்டுரை கிடைத்த நாள் 29-11-72.

கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன.

# கொங்கு

சென்ற ஆண்டின் சந்தாவை இன்னும் அனுப்பாத நண்பர்கள் அடுத்த ஆண்டிற்கும் சேர்த்து ஆறு ரூபாய் அனுப்ப வேண்டுகிறோம்.

அல்லது நான்காண்டுச் சந்தாவாக பத்து ரூபாய் அனுப்பினும் நல்லதே.

—ஆசிரியர்.

# தொடக்கவுரை

தொழிலதிபர் **நா. மகாலிங்கம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகம் வியாபார நிமித்தமாக வெளிநாட்டவருடன் தொடர்பு கொண்டிருந்தது என்பதை வரலாற்று நூல்கள் பகர்கின்றன. கோவைக்கு ஏழு மைல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூர் வழியாகத்தான் தமிழகத்து வியாபாரம் நடைபெற்றுவந்ததாகக் கூறப்படுகிறது. கொங்கு நாட்டவர்களும் அந்த வணிகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்.

பழங்காலத்திலிருந்த சிறந்த நூல்கள் கவனிக்கப்படாமல் இருப்பதை பலவேறு சந்தர்ப்பங்களில் நாம் காணுகிறோம். ஒவ்வோரு நூலும் ஒரு உண்மையை நமக்கு உணர்த்துகின்றது.

கொங்கு நாட்டின் சிறப்பினை விளக்கும் நூற்களும் கவனிப்பாரற்று இருப்பதை அறிகிறோம். சமய சம்பந்தப்பட்ட நூல்களாக இருந்ததினால்தான் அதனை அணுக மறந்து விடுகின்றனர்கள். காழ்ப்புணர்ச்சிகளை மறந்து அத்தகைய நூல்களாலும் நாட்டிற்கு நன்மை பயக்கும் என்பதை உணரவேண்டும்.

**சுவடிகள் அழிப்பு**

பழங்காலத்தில் கண்டெடுக்கப் பட்ட ஆதாரச் சுவடிகளில் சில அழிக்கப்பட்டு வருவதை நினைத்தால் மனம் வேதனையடைகின்றது. கொங்கு நாடு பற்றி சான்றுகள் இப்போது ஓரளவு தான் வெளியாகியிருக்கின்றன. அந்த ஆராய்ச்சியின் முழுமையிலும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடவேண்டும். பழங்காலத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க பணிகளில் என்னென்ன அற்புதங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் காணவேண்டும்.

**புதைபொருள் ஆராய்ச்சி**

புதைபொருள் தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடும் நிபுணர்

கள் இன்றுள்ள விஞ்ஞான காலத்தை ஒப்பிடுவது சரியாகாது. அன்றைய கருத்துக்களுக்கும் இப்போதுள்ள கருத்துக்களுக்கும் பல வேறுபாடுகள் இருக்கலாம். இன்றைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் அன்றைய காலத்தில் தோன்றுகிறதே என்று கருதி ஆராய்ச்சிகளை நிறுத்தி விடக்கூடாது.

## தமிழ் ஆராய்ச்சி

தமிழ் நாட்டின் வரலாற்றினை மேலும் தொடர்ந்து நடத்தி அதன் உண்மை நிலைகளை நாட்டு மக்களுக்கு தெரிய படுத்த வேண்டும். தமிழ் ஆராய்ச்சிக்கென்று இந்திய அரசும் தமிழக அரசும் எவ்வளவோ உதவிகள் செய்து வருகின்றன. தமிழ் பேசும் மக்கள் தமிழ் நாடு மட்டுமல்லாமல் வேறு எங்கெல்லாம் இருக்கின்றார்கள். முன்பு எங்கெங்கு இருந்தார்கள் என்று ஆராய வேண்டும்.

## பழமைச் சின்னங்களைப் பாதுகாப்பீர்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டுள்ள புதை பொருள் ஆராய்ச்சி, கல்வெட்டுகள், சிற்பங்கள் சித்திரங்களில் என்னென்ன காணப்படுகின்றன என்பதனை தமிழறிஞர்கள் ஆராய முன்வரவேண்டும். இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சியில் நாம் ஈடுபடவேண்டும். நாம் ஈடுபடா விட்டாலும் வெளி நாட்டு ஆராய்ச்சியாளர்களையாவது ஈடுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். பழமைகளைப் பற்றி ஆராயும்போது பல்வேறு புதிய பொக்கிஷங்கள் நமக்குக் கிடைக்கக் கூடும். நம் நாட்டின் பழமைச்சின்னங்களைப் பாதுகாக்க உதவியாக இருக்கவேண்டும்.

## கூட்டு முயற்சி

இத்தகைய ஆராய்ச்சிகளில் பல்துறை அறிஞர் கூடி உழைக்க வேண்டும். ஒரு புலமையில் விளங்காத செய்தி பிரிதொரு புலமையால் தெளிவடையலாம். அந்த வகையில் ஒரு பொறியாளரும், தமிழ்ப் புலவர் ஒருவரும் சேர்ந்து, கொங்கு என்ற ஆராய்ச்சி இதழை நடத்தி வருகின்றார்கள். அவர்கள் பணி வெல்க என வாழ்த்துகிறேன்.

# ஜெயினூர்

பெ. கு. வரதராசன் M.A.

தருமபுரி மாவட்டத்தில் தென் பெண்ணையாறு ஓடுகிறது. அதனை தடுத்துக் கட்டப்பட்ட அணை மூத்தூர் கிராமத்திலுள்ள கிருச்ணகிரி அணைக்கட்டு. அவ்வாற்றின் வெள்ளத்தை வீணுக்கக் கூடாது என்று ஆங்கிலேயர் தம் ஆட்சிக் காலத்திலேயே சற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகட்கு முன் நெடுங்கல் என்ற விடத்திலோர் அணை கட்டு கட்டியுள்ளனர். இவ்வணைக் கட்டின் பயனுல் பாரூர் ஏரியும் அதனைச் சூழ்ந்துள்ள நிலப்பகுதிகளும் நீர்வளம் பெறுகின்றன.

இவ்வணைக்கட்டின் அருகே நெடுங்கல் உள்ளது. ஒரு சிரு குன்றின் மீது நூறடிக்கு மேற்பட்ட நீளமுடைய நீண்ட ஒரு கல் நட்டு வைத்தாற் போல் (Vertieally) நீளமுடைய கல் அமைந்துள்ளது. தருமபுரியிலிருந்து கிருச்ணகிரி செல்லுவோரும் இக் காட்சியைக் காணுது செல்ல முடியாது. இந்நெடுங்கல்-நெடுங்கல் அணை இவற்றிற்கும் வடகிழக்காக ஒருகிலோ மீட்டர் தூரத்தில் ஓர் அகன்ற நிலப்பரப்பு உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் அடர்ந்த பாறைத் தொடர்கள்-இந்த நிலப் பகுதிக்கும் வடகிழக்கில் சிறிது தொலைவில் தான் ஜெயினூர் என்ற வளமான கிராமம் உள்ளது. மிகச் சிறிய கிராமம் ஐம்பதுக்கும் குறைந்த குடும்பங்களே உள்ள ஊர். அவர்கள் வீட்டில் விளக்கேற்றுவதில்லை. ஆடம்பரத்தை விரும்புவதில்லை. வர்த்தமான கால தீர்த்தங்கபகவான்களின் பிறந்த தினங்களைக் கொண்டாடுகின்றனர். ஜைனர்களின் முக்கிய விரதங்களையும் மேற்கொள்ளுகின்றூர்கள் .

இவ்வூருக்குச் சற்று தென் மேற்கில் பத்து ஏக்கர் நிலம் பலரால் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அது யாருக்குச் சொந்தம் என்பது புலனுகவில்லை. யாரோ ஒருவர் அங்குள்ள சிறு கோயிலுக்குப் பூசை செய்யும் காரணத்திற்காக மானியம் பெற்று வருகிறூர். இந்த நிலப்பகுதிக்கும் தென் பகுதியில் உள்ளது தான் முன் குறிப்பிட்ட அகன்ற நிலப் பரப்பு. அந்நிலப் பகுதியின் வட எல்லைக் கரையோரத்தில் ஒரு கல் 4 அடி உயரம் மேலே தெரியும்படி நடப்பட்டுள்ளது அக்கல்லில் ஒரு சூலம், முக்குடை, ஸ்வஸ்திக் வெட்டப்பட்டுள்ளது. அக்கல்லில் காணும் சின்னம் போல அந்நிலப் பரப்பின் மேற்பகுதியில் அமைந்துள்ள பாறையிலும் வெட்டப் பட்டுள்ளது. அதோடு அக்கல் நடப்பட்டுள்ள திசையைக் குறிக்கும் அடையாளமும் வெட்டப்பட்டுள்ளது. அப்பாறையில் ஏதும் செய்தியில்லை.

கல்லைத் தோண்டி கல்வெட்டு ஏதாவது உளதா எனச் சோதிக்க விரும்பிய என்னை எவரும் அனுமதிக்கவில்லை.

அந்த நிலத்தை உழும் போது கிடைத்த பழங்கால உடைந்த ஓடுகளையும் பளபளப்பான சிறுசிறு கற்களையும் (கல்லாயுதங்கள்) என்னிடம் கொடுத்தனர்.

அந்த நிலப்பகுதி ஜைனர்கள் வாழ்ந்த இடமாக இருக்கலாம். அதனுல் 'ஜெயினூர்' என்ற பெயர் வழக்காறடைந்திருக்கலாம்.

# மகிழ்ச்சியாக" இருக்கிறாள் சுனீதா . . .
# ஆனால், மாலதியோ
# கவலைகளினால் குன்றியிருக்கிறாள்...





தன் உடல் நலத்தைப் பாழாக்கிக்
கொண்டுவிட்டாள் மாலதி.
எல்லாம் அடுத்தடுத்து ஏற்பட்ட
கர்ப்பத்தினால்தான். அவளுக்குப்
பிறந்த குழந்தைகளும் திடமின்றி
பலவீனமாகவே இருக்கின்றன,

ஆனால் சுனீதா முன்னறிவு மிக்கவள்.
தன் குடும்பம் எவ்விதம் அமையவேண்
மென்பதை திட்டமிட்டாள். குடும்பக்
கட்டுப்பாடு முறைகளை நன்கு
அறிந்திருப்பதால் அவளும் அவள்
குடும்பத்தினரும் மனதுக்கேற்றபடி
மகிழ்ச்சியாக வாழ முடிகிறது.

## சிறிய குடும்பமே
## நலமான குடும்பம்

davp 72/

# முதுகுடி நடுகல்

**அமைவு :** இராமநாதபுரம் மாவட்டம், இராசபாளை யத்திற்குத் தெற்கே உள்ள முதுகுடி என்ற ஊரில் உள்ள குத்துக்கல். முக்கோண வடிவில் உள்ளது.

**மொழி :** தமிழ் - பதின்மூன்ரும் நூற்ருண்டு.

**படித்தவர் :** புலவர் செ. இராசு.

**வாசகம் :**

..........................
குலசேகர தேவ
ர்க்கு யாண்டு 34வ
துக் கருங்குளத்திர்க்
கு ஒரு பழி உண்
டான படியாலே
இப்பழிக்கு இவ்வூர்
குடும்பரில் பெரிய
தேவப் பளளன் அணை
வெட்டிப் போகையா
லே இவன் மகளுக்கு
ஊரார்களிட்ட உதி
ரப்பட்டி குடுத்தப்படி தபான
வ நிலம் அரைமா அணை
நிலம் சந்திராதித்தவன்
மானி போவிப்பார்
கா..........................

**விளக்கம் :** முதுகுடிக்கு அருகில் உள்ள 'கருங்குளம்' என்றமிகப்பெரிய குளம் உடைப்பு ஏற்பட்டது. அதை அடைக்கும் முயற்சியில் அவ்வூர்க் குடும்பர் இனத்தைச் சேர்ந்த பெரிய தேவப் பள்ளன் இறந்துவிட்டான். அதற்காக 'உதிரப் பட்டி' மானியமாக நிலம் அவன் மகளுக்குக் கொடுக்கப்பட்டது.

உடைப்பு என்று கூருமல் 'பழி எனக்குறிப் பிட்டுள்ளது காணலாம். 'உதிரப்பட்டி' மானி யம் வழங்கும் பழக்கத்தை நமது இலக்கியங் கள் குறிப்பிடுகின்றன.

# உயிர்ப்பெருக்கமும் கட்டுப்பாடும்

**S. தன்யகுமார், M.Sc.**
துணைப்பேராசிரியர், தாவரவியல் துறை, மாநிலக்கல்லூரி

அறிவியல் துறையில் அமோக வெற்றி கண்டு விரைவாக முன்னேறுகிறது இன்றைய உலகம். இந்நிகழ்ச்சியுடனே குடித்தொகை நெருக்கமும் பல மடங்காக உயர்ந்துள்ளது. மனிதனின் தேவை பூர்த்தித் துணைகளும் (Resources), அவன் குடித்தொகை நெருக்கமும் (Population Density) சமநிலைப்படுத்தப்படவில்லை. இதன் பொருட்டு "குடும்பக் கட்டுப்பாடு" அனுசரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஒரு சிலர் இது இயற்கைக்குப் புறம்பானது என்கின்றனர். ஆனால் இது இயற்கைக்கு எவ்விதத்திலும் முரண்பாடானது அன்று. ஆண் பெண் இயற்கை இச்சையால் கூடி வாழும் முறை எவ்வளவு இயற்கையின் பாற்பட்டதோ அவ்வளவு இயற்கைத் தன்மை பெற்றது குடித்தொகை நெருக்கத்தை சமநிலைப்படுத்தும் முயற்சிகள்.

இம்முறை மற்ற எல்லா உயிரினங்களிலும் காணப்படுகிறது. பழங்கால மனிதரும் இம்முறையை கையாண்டுள்ளனர். காலத்தின் கோலம் இன்றைய மனித சமுதாயத்தில் இவ்வியற்கைத் தன்மை குறைந்து மக்கள் வளம், மற்ற தேவை-துணைகளின் வளத்தைக் காட்டிலும் வெகுவாக பெருகி விட்டது.

உயிரினங்களின் இன்றியமையாத குணங்களில் ஒன்று இனத்தைப் பெருக்கும் தன்மை. ஒரு இனம் வெகுவாக பெருகாமல் தடுப்பதற்கான வழிகள் இயற்கையிலேயே அமைந்துள்ளன. இதனை டார்வின் (Darwin) நான்கு வகைகள் மூலம் தெளிவுபடுத்தினர். அவை உணவு, எதிரிகளின் தாக்குதல், சூழ்நிலை, நோய், இவற்றின் மூலம் எண்ணிக்கைப் பெருக்கம் ஒருவாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பது அவர் கருத்து.

இன்றைய உயிரியல் வல்லுநர் V. C. Wynne Edward, இப்பொருள் பற்றி ஆராய்ந்து புதியதொரு கருத்தினை வெளியிட்டுள்ளார்,

டார்வின் விளக்கிய நான்கு தட்டுப்பாடுகள் (Impediments) இல்லாமல் சுமுக நிலை நிலவிய போதிலும் மற்ற உயிரினங்களின் எண்ணிக்கை பெருக்கம் அதிகமாக வில்லை. இது பழங் கால மனித சமுதாயத்திற்கும் பொருந்தும். உயிரினங்களின் எண்

ணிக்கை பெருக்கை கட்டுப் படுத்தி சமநிலைப்படுத்தும் தன்மை இயற்கையாகவே காணப்படுகிறது. இதுவே புதிய கருத்து.

உயிர்த்தொகை நெருக்கத்திற்கும், தேவை-பூர்த்தித் துணைகளுக்கும் இடையே, தானே இயங்கும் சமநிலைப்படுத்தும் சக்தி உள்ளது. இச்சக்தி எண்ணிக்கைப் பெருக்கை கட்டுநிலைக்கு (celing level) மேல் பெருகாவண்ணம் தடுக்கிறது.

இச்சக்தி பல முறைகளில் செயலாக்கப்படுகிறது. பறவை இனத்தை எடுத்துக் கொண்டோமாயின் அவற்றின் கூட்டமைப்பில் (Society) நடைபெறும் நிகழ்ச்சிகள் இதனை நன்கு விளக்குகின்றன. அவற்றின் கூட்டு அமைப்பில் காணப்படும் மூன்று முக்கிய தன்மைகள்: பிரதேச வரம்பு (Territorial System) பழகு தன்மைகள், தாழ்த்தும் சக்தி.

இம்மூன்று தன்மைகளினால் எண்ணிக்கை பெருக்கம் கட்டுநிலைக்குமேல் போகாமல் தவிர்க்கப்படுகிறது.

வாழும் பரப்பு: ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு சில பறவைகளின் கூட்டமைப்புதான் அனுமதிக்கப்படுகிறது. இதனால் அங்கே உயிர்த்தொகை நெருக்கம் தவிர்க்கப்படுகிறது. இக்கூட்டு அமைப்பினுள் ஒரு சில ஆண் பறவைகளே தங்கள் இறகு வனப்பினாலும், உடல் அமைப்பினாலும் புணர்ச்சியில் ஈடுப்படுகின்றன. இவற்றினும் 'போட்டி' ஏற்பட்டு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையே ஈடுபட முடிகிறது (Sexual Selection).

இவ்வாறு கூட்டு அமைப்பிற்கு குழுக்குறி போட்டி (Conventional rivalry) அடிப்படையாக அமைகிறது.

இந்த விளக்கம் மற்ற எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். மனித சமுதாயத்தில் நிலவும் போட்டி யாவரும் அறிந்தது. குடித்தொகை நெருக்கத்திற்கும் இப் போட்டித் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு நிலவுகிறது. நெருக்கம் பெருகப் பெருக போட்டி பெருகிறது. சமுதாயத்தில் அநீதிகள் அதிகரிக்கின்றன. ஈனச் செயல்கள் மலிந்துவிடுகின்றன. அத்தகைய அநீதிகளைக் கட்டுப்படுத்த குடித்தொகை நெருக்கத்தை கட்டுப்படுத்துதல் ஒரு மறைமுக முயற்சியாகும்.

உயிரினங்களில் காணப்படும் இந்த இயற்கை தன்மை பழங்குடி மக்களிடமும் காணப்பட்டது. இதனால் தான் அக்குடி மக்களிடம் பிறப்பு விகிதம் (Birth Rate) குறைந்து காணப்படுகிறது.

இன்றைய மனித சமுதாயத்தில் வசதிகள் அதிகரித்து, விஞ்ஞான அறிவு வெகுவாக இறப்புவிகிதத்தை குறைத்து விட்ட காரணத்தினால் குடித்தொகை நெருக்கம் பெருகி வருகிறது. ஆயினும்

(தொடர்ச்சி 306ம் பக்கம் பார்க்க)

# பனப்புரம, மங்களம், பூசாரிபட்டி

*21-11-1800* பதினேரு மலபார் மணிப் பயணம் சென்று பன்புரம் சென்றேன். ஒரு காலத்தில் உழுது போட்ட நிலம் பயிரிடப்படாமல் கிடந்தன. வேலி, மரம் ஏதுமின்றிப் பொட்டலாக இருந்தது. ஓடைக் கல்பாறை கள் நிறைந்திருந்தன.

பனப்புரத்தில் ஒரு கோட்டை இருக்கிறது. அதன் பரம்பரைத் தலைவன் ஒரு சிறுவன். அவன் பாட்டி, அவனை என்னிடம் அழைத்து வந்தாள். அவன் உற வினர்கள் விவசாயம் செய்கின்றனர்.

இங்கு மழை மிகவும் குறைவு. அதனாலேயே நிலங்கள் தரிசாக உள்ளன. மழையில்லாமல் பட்ட தொல்லையை விட, பக்கத்துப் பாளையக்காரர் ஒருவரால் பட்டபாடு அதிகம்.

*22-11-1800* ஒரு மலபார் மணிப் பயணம் சென்று மங்களம் அடைந்தேன். இது ஒரு பாளையக்காரருக்குச் சொந்தமான கோட்டையில்லாத கிராமம். இங்கும் விளையா நிலங்களே அதிகம். இங்கு வீடுகள் நாற்பதாகக் குறைந்துவிட்டன. திப்புவின் கொடுமையும், மழையின் மையும் இதற்குக் காரணமாம். இந்தப் பாளையக்கார ரைப் போன்ற ஒரு மட்டியை (One of the most stupid looking man) நான் பார்த்ததில்லை. வெளியே செல்லும் போது மிகக் குறைந்த ஆட்துணையுடனேயே செல்கிறார். சுண்ணாம்புப் பாறை நிலத்தில் கிணறு தோண்டினால் உப் புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. அதனால் தோட்டங் கள் பெருக்கவில்லை, வெய்யில் காலத்தில் மேல்மண்ணைச் சுரண்டி சமையல் உப்பு எடுக்கலாம் (by lixiviation).

*23-11-1800* ஒரு மலபார் மணிப் பயணம் சென்று பூசாரிபட்டியை அடைந்தேன். இங்கு சில கடைகள் இருந்தன. நிலங்களுக்கு வேலிகளும், புதர்களும் நிறைய இருந்ததால், திருடர்கள் கால் நடைகளை ஓட்டிச் செல்லா மல் பாதுகாப்பாக இருக்கிறது. இந்த கிராமம் அரசாங் கத்திற்குச் சொந்தமாக இருந்தபோதிலும், இதைச் சுற்றி லும் பாளையக்காரரின் நிலம் உள்ளது.

இன்று சென்ற வழி, தாராபுரத்திற்கு மேற்கே பார்த் தது போலவே இருந்தது, ஆனால் சில இடங்களில் மிக நல்ல வளமான நிலங்கள் இருந்தன. இங்கிருந்து கோய முத்தூர் மலைத்தொடரும், ஆனைமலைக் கணவாய்த் தொட ரும் நன்கு தெரிகின்றன.

(தொடரும்)

**(அடுத்த நாள் பொள்ளாச்சி செல்கிறார்).**



# குழந்தைகள் அதிகமாக இருந்தால் பின்னர் குடும்ப வருமானம் கூடுமா?

ஒவ்வொரு குழந்தையும் உழைக்கும் கரங்களுடனன்றோ பிறக்கிறது என்று கூறுவோர் உண்டு.

ஆம். உண்மைதான். ஆனால் பிறந்தவுடனேயே உழைக்க ஆரம்பித்துவிடமுடிகிறதா? அல்லது ஒய்ந்துவிட்ட முதிய பருவத்தில்தான் வேலை செய்ய முடிகிறதா? மாறாக, பிறந்த நாள் முதல் வாழ்வின் இறுதி வரை மனிதனுக்கு உணவு, உடை எல்லாம் தேவைப்படுகிறது.

நவீன முறைகள் மூலம் இப்போது உங்களால் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். நிச்சயம்தான். ஆனால் அதற்கு நல்ல திறமையும் கல்வியறிவும் வேண்டும்.

பொதுவாக, படித்தவர்கள்தான் வாழ்க்கையில் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

அதிக குழந்தைகள் இருந்தால் அவர்களை நன்றாகப் படிக்க வைக்க முடியுமா? அவர்களுக்கு நல்ல உணவளிப்பதுகூட கஷ்டமாக இருக்குமல்லவா!

பலவீனமான, படிப்பும் இல்லாத பல குழந்தைகளைவிட, நன்கு படித்த, திடகாத்திரமான ஓரிரு குழந்தைகள் கூடுதலாகச் சம்பாதிக்கமுடியும்.

davp 72/382

(301ம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்களிடம் காணப்படும் இயற்கைத் தன்மை, எண்ணிக்கை கட்டுப்படுத்தும் தன்மை பலராலும் பல விதத்தில் கையாளப் பட்டு வந்தது. கையாளப்படுகிறது. ஆக இது மனித சமுதா யத்திற்குப் புதியது அன்று.

பழங்காலத்தே சமூகத்தில் நிலவிவந்த மரபுகள் ஒரு விதத்தில் இக்கட்டு நிலையை உறுதிப் படுத்தி வந்துள்ளன. தவநெறி கொண்டு காடு செல்வது. ஒரு குறிப்பிட்ட வயது அடைந்தவுடன் மனமாற்றம் ஏற்பட்டு தெய்வீக துறையை நாடுதல், பிரம்மசாரி கள், விதவைகள் மற்றும் இது போன்ற சில வழக்கங்கள் இக் கட்டு நிலைக்கு துணை புரிந்துள்ளன. இன்றைய நிலையில் இப்பழக் கங்களிலே பல மாறுதல் ஏற்பட்டு சமநிலை பாதிக்கப்பட்டு விட்டது.

சமூகத்தின் வெளிப்புற தோற்றம் மாறிவிட்டது. ஆயினும் சமநிலைப்படுத்த வேண்டும் என்னும் இயற்கை உணர்ச்சி மாற வில்லை. இத்தகைய மாறுதல்களினால் நவீன முறைகளிலே இந்த இயற்கை உணர்ச்சியை செயலாக்க வேண்டியநிலையில் இருக் கின்றோம்.

குழுச்சண்டைகள், நரபலிகள். போன்றவைகளினால் பழங் குடி மக்களின் பிறப்பு விகிதம் குறைந்து விட்டது. மற்றும் அவர் கள் புணர்ச்சி தவிர்த்தல், கருச்சிதைவு, சிசுவதை முதலிய வற்றை கையாண்டு உள்ளனர்.

இவ்வாறு பழங்குடி மக்களிடம் காணப்பட்ட ஒரு சில வழக் கங்களை நாம் அறிவு வளர்ச்சி காரணமாக தவிர்த்து விட்டோம். இத்துடன் எண்ணிக்கை பெருக்கமும் அதிகமாகிவிட்டது. என வேதான் நாம் குடித்தொகை நெருக்கம் குறைய திட்டமிட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

மற்றும் இக்குடித்தொகை நெருக்கப் பிரச்சனை உடல்-மனம் (Psycho-somatic) பாற்பட்டது. இன்றைய நிலையும் பண்டைய நிலையும் வேறு. இன்றைய நிலையில் தாயையும், அவளுடைய மக னையும் மகப்பேறு மருத்துவமனையில் அவரவரின் (பிறந்த) குழந் தையுடன், அடுத்தடுத்த படுக்கைகளில் காணலாம்.

மனிதர்களிடையே இயற்கையாகக் காணப்படும் பல ஒன்மைகளில் குடித்தொகை நெருக்கம் தவிர்க்கும் குணமும் தன்று. இது இயற்கைக்கு புறம்பானது ஒன்று அல்ல. இது காறும் விவரித்ததின் மூலம் குடித்தொகை நெருக்கம் அதிகமாகா மல் தடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று என்று தெளிவு பெறலாம்.

மனித இனம் பசி, பற்றுக்குறை, சமூக அநீதிகள், நோய் இவற்றிலிருந்து தப்பி, இன்பமாய், வாழ, தேவைப் பூர்த்தி துணைகளுக்கும், குடித்தொகை நெருக்கத்திற்கும் இடையே சம நிலை நிலவ வழி செய்ய வெண்டும். இதில் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்பது வெள்ளிடைமலை.

# தலைமையுரை

மாண்புமிகு, சட்டமேலவைத் துணைத் தலைவர்

**சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள்**

கொங்கு என்ற பெயரில் வெளிவரும் பத்திரிக்கையை நான் தவறாமல் படித்து வருகிறேன். அந்தப் பத்திரிக்கை சிறப்பாக நடத்தி வரும் புலவர் இராசு அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்திய நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் முடிந்து விட்டன. கால் நூற்றாண்டு வெள்ளி விழாவினை நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடியிருக்கின்றோம். இத்தனை ஆண்டு காலமாகியும் இன்னமும் இந்திய வரலாற்றினை முறையாகத் தொகுத்து வெளியிடவில்லை. நமது வரலாற்றினை அந்நியர்கள் மூலம்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. வெள்ளையர்களின் ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்துடன் நமது வரலாறுகள் உருவாகியிருக்கின்றன என்பதைப் பல உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டலாம்.

## கட்டபொம்மன் யார்?

வெள்ளையர்கள் எழுதிய நூல்களில் குறுநில மன்னர்களைப் பாளையக்காரர்கள் என்றும், கட்டப் பொம்மனைக் கொள்ளைக் காரன் என்றும் குறிப்பிட்டுத் தங்களுடைய விஷத்தைக் கக்கியிருக்கின்றார்கள். இந்தச் செயல் நமது மனத்தைப் புன்படுத்துவதாக இருக்கின்றது.

இப்படியெல்லாம் வெள்ளையர்கள் அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தபடி அவர்கள் கண்ணோட்டத்தில் எழுதியிருக்கின்றார்கள். பொதுவாக வரலாற்றினை அவர்கள் மறைத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

## குழுவோடு போனது

தமிழகத்தில் இருக்கின்ற கோயில்கள் யார் காலத்தில் எப்போது யாரால் கட்டப்பட்டது என்ற உண்மை கூட நமக்குத்

தெளிவாக இன்னமும் கிடைக்கவில்லை. நமது வரலாற்றினை வெள்ளையர்கள் திரித்துக் காட்டினார்கள். ஆனால் நம்மவர்களோ அதையும் மறைத்துக் காட்டினார்கள்.

இந்தியாவின் வரலாற்றினை ஆராய முற்படும்போது மண்டலம் மண்டலமாக ஆராயப்படுவது நல்லது. அப்படி மண்டலம் மண்டலமாக ஆராய்ந்தால் உண்மை விவரம் ஆராய்ச்சியாளர்கட்குக் கிடைக்கும். அதன் பலன் நாட்டு மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். சுதந்திரப் போராட்ட வரலாறினை எழுதுவதற்கு இந்தியப் பேரரசு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழுவை நியமித்ததோடு நின்றுவிட்டது. அந்தக் குழு வரலாற்றினைப் பற்றிய தகவல்களை இதுவரை சேகரித்ததாகவோ, அறிக்கை வெளியிட்டதாகவோ தெரியவில்லை. இனியாவது இந்திய வரலாற்றினை எழுதும் முயற்சியில் இந்தியப் பேரரசு ஈடுபடவேண்டும். வரலாற்றினை எழுதும்போது உண்மைகள் மறைக்கப்படலாகாது.

## இந்தியப் படத்தில் இருட்டடிப்பு

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் புரட்சி நூற்றாண்டுத் திரைப்படத்தினை முன்பு எடுத்து நாடு முழுவதிலும் திரையிட்டனர். அந்தத் திரைப்படத்தில் இந்தியாவின் நிலப்படம் பொதுப்படையாகக் காட்டப்பட்டதே தவிர அதன் மாநிலப் பிரிவுகள் குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை. உட்பிரிவுகளே இல்லாத நாடுபோல் இந்தியாவின் படம் இருந்தது. இப்படிப்பட்ட இருட்டடிப்பு இனியாவது தவிர்க்கப்பட வேண்டும்.

இந்திய சரித்திரத்தை எழுதும்போது மொழிவாரி மாநிலங்களைத் தனிக் கணக்கெடுத்து அதற்குத் தகுந்தபடி எழுதவேண்டும். தமிழ்நாட்டைப் பற்றி எழுத முன்வருபவர்களும் மண்டலம் மண்டலமாக எழுதினால்தான் அது பயனுடையதாக இருக்கும். மண்டல ரீதியில் எழுதிடும்போது விருப்பு வெறுப்பு இன்றி எழுதிடல் வேண்டும். தங்களுடைய நாட்டின் சரித்திரத்தை எழுதும்போது கொஞ்சம் வர்ணனை இருக்கலாமே தவிர உண்மை மறைக்கப்படக்கூடாது.


கொங்கு நாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனத் தனித்தனியே பிரித்து ஆராய்ச்சி செய்கிறவர்கள்-வரலாற்றினை எழுதுபவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து எழுத வேண்டும். புதைபொருள் ஆராய்ச்சி-தொல்பொருள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதில் அதிகத் தீவிரம் காட்டவேண்டும்.

## தமிழக வரலாற்றுக் குழு

கால் நூற்றாண்டாகியும் இந்திய வரலாற்றினை எழுத முற்படவில்லை. நல்ல வேளையாகத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்புகள்-வரலாற்று சம்பவங்களை ஆராய்ந்து எழுதுவதற்கென ஒரு குழுவினை அமைத்திருப்பது பாராட்டுவதற்குரியது. அந்தக்குழு டாக்டர் மு. வரதராசனாரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் கலைஞர் ஆற்றிவரும் பணி மகத்தானது. தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் இந்தத் திட்டம் இருக்கின்றது. இதன் மூலம் நமது முதல்வர் புதிய சகாப்தத்தை உருவாக்கி விட்டார்.

வரலாறு என்பது தேய்ந்துகொண்டுதான் இருக்கும். பாதம் படியாத ஒற்றையடிப் பாதையில் கால்வைத்து போகும்போது முள் குத்தத்தான் செய்யும். அதில் நடக்கும்போது முள் குத்தி ரத்தம் சொட்டத்தான் செய்யும். இருந்தாலும் துணிச்சலுடன் அந்தப் பாதையில் செல்லவேண்டும். மறைந்த உண்மைகள் மக்கள் மன்றத்திற்கு வரும்போது மறுப்புகள் வரத்தான் செய்யும். அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இது போன்ற ஆராய்ச்சியில் இன்னும் தீவிரம் காட்டவேண்டும்.



# சிறப்புரை

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

நெ. து. சுந்தரவடிவேலு M. A., L. T.

தமிழகத்தில் தெரிந்தோ தெரியாமலோ நாம் சில தவறுகளைச் செய்து வருகிறோம். கலையை போற்றுவோம். கலைக்கு மூலகாரண மாக இருந்த கலைஞரைப் போற்றுவதில்லை. இந்தப் போக்கினை மாற்றி அமைத்திடல் வேண்டும். வரலாற்று உண்மைகளை மறைத்து வைப்பதனால் எந்தப் பலனையும் அடையப் போவதில்லை வரலாற்றினை எழுத முற்படும்போது நமக்குப் பரம விரோதியாக இருப்பவராக இருந்தாலும் அவர் செய்த நல்லவைகளை இம்மி யும் குறைவு படாமல் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். நமக்கு விரோதியாயிற்றே என்று மறைத்து விடக் கூடாது.

## புதைபொருள் ஆராய்ச்சி

விரிவான முறையில் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி ஏராளமாக நடத்தப்பட வேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சியில் பல்கலைக் கழகம் அதிக மாக ஈடுபாடு கொண்டுள்ளது. லாப நட்டக் கணக்குப் போடு வது கூடாது. தொல்பொருள் ஆராய்ச்சிக்கென சென்னைப் பல் கலைக் கழகம் நிதி ஒதுக்கீடு செய்து அது தன் ஆராய்ச்சியினை முறையாக நடத்தி வருகிறது, பல தகவல்களைச் சேகரித்துள்ளது. நமது தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப் பட்டவை களை வெளிநாட்டார் பார்த்து பிரமித்து போனார்கள். அவர்களது வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு இந்தக் கண்டுபிடிப்புகள் நல்ல பயனுள்ளதாக அமைந்துள்ளதாகக் கூறுகிறார்கள். நமது புதை பொருட்கள், உலகத்திலுள்ள புதை பொருட்களைவிட அதிகமாக இருக்கிறது. இளைய தலைமுறையினர் இந்தப் புதைபொருள் வரலாற்று ஆராய்ச்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

பல துறையைச் சேர்ந்த அறிஞர்கள் தங்களது துறைகளைப் பற்றி ஆராய்ச்சிகளை வெளியிடுவது போல் தமிழ்நாட்டின் பெரு மைகளை வெளிப்படுத்த முன்வரவேண்டு. இளைய தலைமுறை யினர் தமிழரைப் பற்றியும்-தமிழைப் பற்றி-மொழியைப் பற்றி -ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். தமிழ்த் தொண்டிற்குத் தங்கள் காலத்தைச் செலவழிக்க வேண்டும்.

அந்த வழியில் ஈடுபட்டு 'கொங்கு' என்ற ஆராய்ச்சி இதழை நடத்திவரும் இளைஞர்களைப் பாராட்டுகிறேன்.

# கொங்கு இரண்டாம் தொகுதி - 1972

## கட்டுரைப் பட்டியல்

### பொறியியல் — அறிவியல்


| | | |
|---|---|---|
| சத்தாசிவம். மு, | திட்பக் காட்சி | 3-6 |
| சண்முகன், கொடுமுடி, ச. | செங்கல் கட்டிடம் | 39-41 |
| ,, | ஓதம் தவிர்த்தல் | 42 |
| ,, | தரை வழித்தல் | 235-238 |
| முகர்ஜி | கம்பி | 103-106 |
| இராமர், Dr. கி. | மின் ஆற்றல் | 31-33 |
| ,, | மின் கடத்தல் | 87-89 |
| பொன்னவைக்கோ, Er. மு. | ஈரிலக்க எண் முறை | 119-121 |
| இராமன், Er, இரா. | தாங்கிகள் | 127-129 |
| மனோகர், ந. | புகை | |
| ,, | இனம் இனத்தையே சாரும் | 171-172 |
| ,, | நிலக்கடலை, வேர்க்கடலை? | 210 |
| ,, | கிள்ளை இனம் | 277-278 |
| இராமராசு, அ. இரா. | காந்த உயிரியல் | 191-194 |
| ,, | பொருளும், எதிர்ப்பொருளும் | 243-246 |
| இராமசாமி, இரா. | சதுப்பு நிலங்கள் | 267-270 |
| தன்ய குமார், S. | உயிர்பெருக்கமும் கட்டுப்பாடும் | 302, 303, 306 |


### நிலவியல்


| | | |
|---|---|---|
| மணிமேகலை, க. | கழிமுகம், வடிகால் | 58 |
| இராசசேகரன், Dr. கொ. ச. | நவமணிகள் | 23-26, 67-69 |
| ,, | கடல்நீர் | 147-149, 167-170 |
| ,, | பாறைப் படிவு உருவம் (தொல்லுயிரெச்சம்) | 170 |
| இராமநாதன், செ. | நிலச்சரிவும் காரணங்களும் | 219-222 |

**தமிழ்**


| | | |
|---|---|---|
| கணேசன், இரா. | சலவை | 283-284 |
| எத்திராசன், புலவர். முத்து | சித்திரப்பா | 73-74 |
| சண்முகன், கொடுமுடி. ச. | ஓலைச்சுவடி கண்டு பிடிப்பு | 157 |
| இராசு, புலவர் செ. | குணவீர பண்டிதர் | 173-179 |
| தில்லை நாயகம், வே. | கொங்கு முதல் தொகுதி மதிப்புரை | 271-276 |
| எழில் மகிழ்நன்., ந | தூவல் | 315 |


**மருத்துவம்**


| | | |
|---|---|---|
| தம்பித்துரை, Dr. C. R. | துடிப்பறிவி | 72-73 |
| யூரி நிக்கோலேய் | உண்ணுநோன்பு ஒரு மருத்துவம் | 151-152 |


**தொல்லியல் — வரலாறு**


| | | |
|---|---|---|
| புக்கானன் | ஆயிரத்தெண்ணூறில் தமிழகம் | 49-51, 90-100 123-125, 155-156, 180-182, 197-198, 229-230, 259-260, 285-286, 304 |
| கரையூர்க்கிழார் | மயன்மரபு | 43-46, 95-98, 159-162, 203-206 |
| அறவாணன், க. ப. | சிந்துவெளி மொழி | 27,52-53 70-71, 103-104 |
| சஞ்சீவி, Dr. ந. | கருத்தரங்கத் தொகுப்புரை | 251-255 |
| தெய்வசிகாமணிக் | அயிரை | 13-16 |
| கவுண்டர், வே. ரா. | நன்று | 90-91 |
| பிரும்மமாராயர் | கவுண்டர் | 208-209, 281 |
| இராமச்சந்திரன், Dr. சி. | கவுண்டர் | 280-281 |
| வெங்கடராமன், புது. பொ. | கடத்தூர் நடுகல் | 256 |
| ,, | நெருப்பூர் நடுகல் | 301 |
| இலட்சுமணன். புலவர் சி. | நாற்பத்தெண்ணாயிர நல்லூர் | 47-48 |
| காசிநாதன், நடன. | வேடியப்பன் கோயில் | 7-10 |
| ,, | தமிழிக் கல்வெட்டுகள் | 231-233 |
| எத்திராசன், புலவர் முத்து | சித்திரப்பா | 73-74 |

| | | |
|---|---|---|
| தாமோதரன், கு. | கல்வெட்டில் கணிதம் | 55 |
| ,, | தமையனைக் காத்த தம்பி | 196 |
| அப்துல் மஜீத், அ. | அத்திரம்பாக்கம் | 183-186 |
| நெய்தல் மூர்த்தி | கற்கால மனிதன் | 174 |
| ,, | இராமாயணச் சிற்பம் | 182 |
| நேதாஜி, மாயூரம் S. | பழமைச் சின்னமும் பாதுகாப்புச் சட்டமும் | 71-73 |
| மகாதேவன், வே. | மாறி வழங்கிய மா | 143-146 |
| இராசேந்திரன, அ. | எழுத்துக் கல்பாறை | 257-258 |
| சீதர், கி. | பர்மாவுடன் தமிழர் தொடர்பு | 94 |
| சின்னசாமி, புலவர் தே. ப. | திருமண வயது | 16 |
| சண்முகன், கொடுமுடி ச. | குறும்பொறைக் கோமான் | 75-81 |
| ,, | சுக்காலியூர் குகைப் படுக்கைகள் | 114-118 |
| ,, | கரூர்க் கோட்டை | 211-214 |
| ,, | கந்தபுரம் | 247-250 |
| கொடியன் | முறை தெரியாக் கதை | 92-94 |
| ,, | கொங்கத்து எழுமாத்தூர் | 125 |
| ,, | கண்ணகியும், பகவதி வழிபாடும் | 130 |
| ,, | திரிசூலம் திருக்கோயில் | 153-154 |
| இராசு, புலவர் செ. | பருத்திப்பள்ளி நாடு | 59 |
| ,, | கல்வெட்டுப் பயிற்சிப் பாசறை | 112-114 |
| ,, | கேரளத்தில் தமிழ்க் கல்வெட்டு | 169 |
| ,, | கண்ணகி | 291-296 |
| ,, | முதுகுடி நடுகல் | 501 |


## ஆய்வு மேடை


| | | |
|---|---|---|
| அறவாணன், க. ப. | புரட்சிப் பொறிகள் | 83 |
| அறவாணன், க. ப. | கட்டுரை எழுதுதல்எப்படி? | 179 |
| தாயம்மாள் அறவாணன் | பெண்மொழி | 93 |
| கணேசன், இரா. | அறிவியல் தமிழாக்க முறைகள் | 132 |
| வானமாமலை, ந. | ஆராய்ச்சி | 133 |
| நாகசாமி, இரா. | செங்கம் நடுகற்கள் | 135 |
| ,, ,, | கல்வெட்டியல் | 149 |

| | | |
|---|---|---|
| இறையரசன், கவிஞர். | கன்னிப்பாவை | 250 |
| வளன் அரசு, பா. | கட்டுரைக் களஞ்சியம் | 258 |
| பன்னீர்செல்வன், தரங்கை | நறுந்தணர் | 287 |
| | கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி 80 ஆண்டு நிறைவு மலர் | 28-29 |
| | கொங்கு முதல் தொகுதி | 271-276 |


## ஆளுமையாளர்கள் (Personalities)


| | | |
|---|---|---|
| கலைஞரென்றும் கவிஞர் | கவிதை | 163 |
| பொறியாளர், பொ. குமாரசாமி | செய்தி | 48 |
| பொறியாளர், பா. வே. மாணிக்க நாயகர் | ,, | 51 |
| கந. து. சுந்தர வடிவேலு | ,, | 209 |
| வள்ளலார், காந்தி அடிகள் | ,, | 256 |
| கொண்டல் சு. மகாதேவன் | ,, | 131-133 |
| சஞ்சிவி, Dr. ந. | ,, | 230 |
| வலவர் A. சித்தையன் | பச்சை விளக்கு | 56-58 |
| செல்வி சித்ரலேகா | பறக்கும் பாவை | 19-21 |


### பிற


| | |
|---|---|
| ஊதுகிற சங்கு | 137-138 |
| கலவை | 195-196, 227-228, 261-262, 282-283 |


## கொங்கு இதழ் பற்றியவை


| | | |
|---|---|---|
| கருணாநிதி, Dr. கலைஞர் மு. | வாழ்த்து | 110 |
| மீனாட்சிசுந்தரம், இராம | ,, | 276 |
| பொன்னப்பன், மா. | ,, | 279 |
| இறையரசன், கவிஞர் | ,, | 279 |
| பிரகதம், ச. | Statement of ownership | 84 |
| ஈராண்டு விழா | அழைப்பிதழ் | 199-202 |
| கொங்கு குறிப்பு | | 223-226 |
| சஞ்கிவி, Dr. ந. | தொகுப்புரை | 251-255 |
| திலலை நாயகம், வே | முதல் தொகுதி மதிப்புரை | 271-276 |
| சிவஞானம், ம. பொ. | தலைமையுரை | 307-309 |
| சுந்தரவடிவேலு, நெ. | து. சிறப்புரை | 310 |
| மகாலிங்கம், நா. | தொடக்கவுரை | 927-298 |

# தூவல் (PEN)

நா. எழில் - மகிழ்நன்

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் முதற்றாய் மொழி' என்ற நூலில் தூவல் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

'பறவைகள் புணர்ச்சி வேளையிற் சிறப்பாகவும், பிறவேளைகளிற் பொதுவாகவும், தம் உடம்பினின்று மெல்லிறகுகளைத் தூவுவதினால், அவற்றிற்குத் தூவு என்னும் பெயருண்டாயிற்று.

தூவு — தூவி

தூவு —தூவல் = இறகு, இறகினாலான எழுதுகோல் Pen என்னும் ஆங்கிலச் சொல்லும் இக்காரணம் பற்றியதே.

L — Penna, — feather'',


ஆகவே, பென்னா (Penna) என்கின்ற இலத்தீன் சொல், எழுதப் பயன் படுகின்ற இறகினைக் குறிக்கின்றது. பென்னா என்ற இலத்தீன் சொல்லிலிருந்தே பென் (Pen) என்ற ஆங்கிலச் சொல் உருபெற்றது. மேலும் அதனைப் பேனா என்றும் தமிழில் வழுவாக வழங்கி வருகின்றோம்.

18-ம் நூற்றாண்டு வரை இறகினால் மையைத் தோய்த்து எழுதி வந்தனர். 18-ம் நூற்றாண்டிற்குப் பிறகு, மைக்கூட்டிலுள்ள மையில் தோய்த்தெழுதுவதற்குப் பகரமாகத் தூவலிலேயே மை தங்குவதற்கு ஆய்வு செய்து, வெற்றி கண்டனர். இவ்வகைத் தூவல்களே Fountain Pens என அழைக்கப் பெறுகின்றன.

கழக ஆங்கிலத் தமிழ்க் கையகர முதலியில் Fountain எனற சொல்லுக்கு நீர் ஊற்று, சுனை, பிறப்பிடம் என்று பொருள் எழுதியுள்ளனர். ஆனால் (கொங்கு 15-11-72) கலவையாசிரியர் ஊற்றிற்கு இரண்டு பணிகள். ஒன்று, உள்ளிருந்து நீர் ஊறி வருதல்: மற்றது நீரை வெளியே தூவித்தெளித்தல்' என்று கூறி, தூவல் இரண்டாவது செயலை மட்டுமே செய்வதாகக் கூறியுள்ளார். ஆனால், தரையில் நீரிருந்தால் தான் ஊற்றிலே நீர் ஊற வாய்ப்புண்டு. நீர் ஊறினாற்றான், அதனைத் தூவித் தெளித்தல் சாலும். ஆகவே இரண்டு செயலையும் ஊற்றே செய்கிறது. அனால், தூவலில் நாம் மையை நிரப்புகின்றோம். பின் அது தூவுகின்ற செயலை மட்டும் செய்கின்றது.

மேலும். கழகத் தமிழ் அகர முதலியில் ஊற்று என்ற சொல்லுக்குக் கசிவு என்றும் ஒரு பொருள் குறிக்கப் பெற்றுள்ளது அதாவது தூவலின் குழாயி (Barrel) லுள்ள மையானது, உமிழி (Feeder) வழியாக கசிந்து வெளியாகி, மெல்லிய முனை (Nib) வழியாக தூவப்பட்டு எழுத்து உண்டாக்கப்படுகிறது.

ஆகவே, தூவல்என்ற சொல்லே 'பேனா' என்ற இலத்தீன் சொல்லுக்கும், Fountain Pen - என்ற சொற்கட்குத் ஊற்றுத் தூவல் என்ற சொற்களுமே சரியான தனித்தமிழ்ச் சொற்களாகும்.




ஆசிரியர்: புலவர் செ. இராசு.
அச்சிட்டவர்: து. இராஜலட்சுமி ரேணுகா பிரிண்டர்ஸ், [சென்னை-20.
வெளியிட்டவர்: ச. பிரகதம்.
அலுவலகம்: 26, இந்திரா நகர், சென்னை-600020.